□□□□□□□ □□□□□□ □□□□□□□□□ □□□□□□□ □□□□□□□□□ | ...

Written by Administrator
Saturday, 13 June 2009 13:31 - Last Updated Saturday, 13 June 2009 13:34

□□□□□□□□ **11.06.2009**



மெட்ரோ ரயில் கட்டுமான பணிகள் துவக்கம்

சென்னை, ஜூன் 11-
சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தில், கோயம்பேடு முதல் அசோக்நகர் வரையிலான உயர்த்தப்பட்ட ரயில்பாதைக் கட்டுமானப் பணிகளை துணை முதல்வர் ஸ்டாலின் நேற்று துவக்கிவைத்தார்.

சென்னையில் பெருகி வரும் போக்குவரத்துத் தேவைகளுக்கு நீண்டகாலத் தீர்வாக, மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த, 2006ம் ஆண்டில் தமிழக அரசு முடிவெடுத்தது.

இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை டில்லி மெட்ரோ ரயில் கழகம் தயாரித்தது.

இத்திட்டத்திற்கு 2007ம் ஆண்டு இறுதியில் தமிழக அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டு, 'சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட்' என்ற பொதுத்துறை நிறுவனம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீடு 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய்.

இத்திட்டச் செலவில் 59 சதவீதம் ஜப்பான் அரசின், அனைத்து நாடுகள் கூட்டுறவுக்கான அமைப்பின் நிதி உதவியால் அமைகிறது. வண்ணாரப்பேட்டையிலிருந்து அண்ணாசாலை வழியாக விமானநிலையம் வரையில் முதல் வழித்தடமும், சென்னை சென்ட்ரலிலிருந்து கோயம்பேடு வழியாக பரங்கிமலை வரை இரண்டாவது வழித்தடமும் அமைகின்றன.

மொத்தம் 45 கி.மீ., நீளத்திற்கு அமையும் இந்த வழித்தடங்களில் 24 கி.மீ., சுரங்கப் பாதையாகவும், மீதமுள்ள பகுதி உயர்த்தப்பட்டப் பாதையாகவும் இருக்கும்.

முதல்கட்டமாக, கோயம்பேட்டிலிருந்து அசோக்நகர் வரையில் 4.5 கி.மீ., நீளமுள்ள வழித்தடம் கட்டுவதற்கான ஒப்பந்தம், ஐதராபாத்தைச் சேர்ந்த சோமா என்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு 199.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது.

இதற்காக, நூறடிச் சாலையில் கோயம்பேடு, வடபழனி மற்றும் அசோக்நகர் ஆகிய இடங்களில் சாலையின் மத்திய பகுதியில் சோதனைக்குழிகள் தோண்டப்பட்டு, மண் பரிசோதனைப் பணிகள் நடந்தன.

சோதனைப் பணிகள் முடிக்கப்பட்டு, உயர்த்தப்பட்ட ரயில் பாதை அமைப்பதற்காக, தரையில் தாங்கு உருளைகள் அமைக்கும் பணி துவக்கப்பட்டுள்ளது. இப்பணியை, துணை முதல்வர் ஸ்டாலின் நேற்று துவக்கி வைத்தார். திட்டத்திற்கான அடிக்கல்லையும் திறந்து வைத்தார்.

அப்போது ஸ்டாலின் கூறியதாவது:

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அரசு, இந்தாண்டின் துவக்கத்திலேயே ஒப்புதல் அளித்தது. தமிழக அரசின் பங்கு 550 கோடி ரூபாய், தற்போது தயாராக உள்ளது.

முதல்கட்டமாக மத்திய அரசு 13 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகைகள் தவணை அடிப்படையில் தேவைக்கேற்ப வழங்கப்படும். திட்டம் 2014 அல்லது 15ம் ஆண்டிற்குள் முழுமையாக முடிக்கப்படும்.

இவ்வாறு ஸ்டாலின் கூறினார்.

விழாவில், தமிழக தலைமைச் செயலர் ஸ்ரீபதி, சென்னை மேயர் சுப்பிரமணியன், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண் இயக்குனர் சோமநாதன், தொழில்நுட்ப ஆலோசகர் சுவாமிநாதன், டில்லி மெட்ரோ ரயில் கழகத்தின் சென்னை பிரிவைச் சேர்ந்த திட்ட இயக்குனர் சோமசுந்தரம், ஆலோசகர் ராஜாராமன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை மெட்ரோ ரயில் பாதை கட்டுமானப்பணியை, துணை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார்.